# மிளகாயை இருப்பு வைத்து விற்கலாம்

மிளகாய் உற்பத்தியில் இந்தியா முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து சீனா மற்றும் பாக்கிஸ்தான் நாடுகளும் முன்னிலை வகிக்கின்றன. 2014-15ம் ஆண்டு இந்தியாவில் மிளகாய் 7.75 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு அதன் உற்பத்தி 14.9 இலட்சம் டன்னாக உள்ளது. இந்த உற்பத்தியானது, கடந்த வருடத்தைவிட 9 சதவீதம் அதிகமாக உள்ளது. கடந்த பருவத்தில் அதிகரித்த ஏற்றுமதியின் காரணமாக நடப்பு ஆண்டில், மிளகாயின் விலை உயர்ந்துள்ளது. இந்தியாவில் அனைத்து மிளகாய் சந்தைகளிலும் வரத்து நவம்பர் மாதம் தொடங்கி மே மாதம் முடிவடைகின்றது.

2013-14ம் ஆண்டில், 41,410 எக்டர் நிலப்பரப்பில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு அதன் உற்பத்தி 11,294 டன்னாக உள்ளது. இது சென்ற வருடத்தை ஒப்பிடுகையில் 38 சதவீதம் மிளகாய் உற்பத்தி குறைவாக காணப்படுகின்றது. தமிழகத்தில் இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் முண்டு இரகமும், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சம்பா இரகமும் பயிரிடப்படுகின்றன. தற்போது, மிளகாயின் வரத்து சந்தையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் ஏற்ப்பட்ட சீரற்ற மழை காரணமாக சென்ற ஆண்டை விட மிளகாய் வரத்து குறைவாக காணப்படும் என மிளகாய் வியபாரிகள் எதிர்பார்க்கின்றனர். ஆந்திர பிரதேசத்திலும் மழையின் காரணமாக மிளகாய் உற்பத்தி குறைந்துள்ளது.

இந்நிலையில், விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகமானது கடந்த 15 ஆண்டுகளாக திருநெல்வேலி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவி வரும் சம்பா வகை மிளகாய் வற்றல் விலையை ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், சம்பா வகை மிளகாய் வற்றல் திருநெல்வேலி சந்தையில் ஏப்ரல் - ஜுன், 2016ல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.12,500 முதல் ரூ.13,000 வரை இருக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியின் பற்றாக்குறை காரணமாக விலை சற்று உயர வாய்ப்புள்ளது என அறிவுறுத்தப்படுகின்றது. எனவே,

விவசாயிகள் அறுவடை செய்த மிளகாயை சேமித்து விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்-641003

தொலைபேசி- 0422-2431405


**<u>மேலும் தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி- 0422-6611284